நிலையில் பாதுகாப்புப் படையில் 15 வருடம் பணிசெய்திருந்தால் மாவட்ட ஆட்சியாளர் பரிந்துரையினபேரில் 2 ஆயிரம் கடன் அளிக்கிறோம். அவர்களுக்கு உள்ள தொழில், வாணிபம், தொழிலில் அவர்களுடைய திறமை, பயிற்சி இவைகளைக் கணக்கில் எடுத்துக் கொண்டு மாவட்ட ஆட்சியாளர் கொடுக்கிற பரிந்துரையின் பேரில் கடன் உதவி காசோலை மூலம் வழங்கப்படுகிறது. இது துவங்கியதிலிருந்து இதுவரையில் 1,417 பேர் வீரர்களுக்கு ரூ. 38,21,000 அளவிற்கு கடன் உதவி வழங்கப்பட்டிருக்கிறது.

நாட்டறம்பள்ளியில் தொழில் பயிற்சிப்பள்ளி

* 141 வினா—திரு. டி. சி. திம்மராயக் கவுண்டர்: மாண்புமிகு தொழிலாளர் நலன்-போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருப்பத்தூர் வட்டம், நாட்டறம்பள்ளியில் (I.T.I.) இன்ஸ்டிடியூட் தொடங்கும் யோசனை அரசுக்கு உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

தஞ்சாவூர் மாவட்டத்தில் மீன்பிடித் தளங்கள்

*142 வினா—திரு. என். கிட்டப்பா:

திரு. வை. பாலசுந்தரம்: மாண்புமிகு சமூகநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) நடப்பு ஆண்டில், தஞ்சை மாவட்டத்தில் மீன்பிடித் துறைமுகங்கள் ஏற்படுத்தும் திட்டம் எந்த அளவுக்கு நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது?

(இ) எங்கெங்கு ஏற்படுத்தப்படும்?

(உ) அவைகளுக்கான மதிப்பீட்டுத் தொகைகள் யாவை?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: (அ), (இ) & (உ) தஞ்சை மாவட்டத்தில், மல்லிப்பட்டணம், கோடிக்கரை ஆகிய இரண்டு இடங்களில் மீன்பிடி தங்கு தளங்கள் அமைக்க அரசு